செ.வெ.எண் -33 நாள்: 22.07.2019

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாட்டில் சொந்தக் கட்டடங்களில் இயங்கும் கிறித்துவ தேவாலயங்களைப் பழுது பார்த்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் மேற்கொள்வதற்கு நிதி உதவி வழங்கும் திட்டம் 2016-17 ஆம் ஆண்டு முதல் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவதற்கான தகுதிகள்</u>**

1.கிறித்துவ தேவாலயம் 10 ஆண்டுகளுக்கு மேலாக சொந்த கட்டடத்தில் இயங்கி இருத்தல் வேண்டும். தேவாலயம் கட்டப்பட்ட இடம் பதிவுத்துறையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.தேவாலயமும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2.தேவாலயத்தின் சீரமைப்பு பணிக்காக வெளிநாட்டிலிருந்து எவ்வித நிதி உதவியும் பெற்றிருத்தல் கூடாது என்ற சான்றிதழ் (பிற்சேர்க்கை -iii) அளிக்க வேண்டும்.

3.சீரமைப்புப் பணிக்காக ஒரு முறை நிதி உதவி அளிக்கப்பட்ட தேவாலயத்திற்கு மறு முறை நிதி உதவி 5 ஆண்டுகளுக்குப் பின்னர் வழங்கப்படும்.

விண்ணப்பப்படிவம் மற்றும் சான்றிதழ் இணையதள முகவரில் www.bcmbcmw@.tn.gov.in - ல் வெளியிடப்பட்டுள்ளது. இதனை படியிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். விண்ணப்பபடிவத்தை அதிலுள்ள சேர்க்கை -ii & iii –ல் உள்ளவாறு பூர்த்தி செய்து அனைத்து உரிய ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களோடு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு விண்ணப்பிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான குழுவினரால் அவ்விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, கிறித்துவ தேவாலயங்களை தர ஆய்வு செய்து, கட்டடத்தின் வரைபடம் மற்றும் திட்ட மதிப்பீடு ஆகியவற்றுடன் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்து உரிய முன் மொழிவுகளுடன் சிறுபான்மையினர் நல ஆணையருக்கு நிதி உதவி வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவரால் பரிந்துரை செய்யப்படும். நிதி உதவி இரு தவணைகளாக தேவாலயத்தின் வங்கிக் கணக்கில் மின்னணு பரிவர்த்தனை மூலம் செலுத்தப்படும். மேலும் கிறித்துவ தேவாலயங்களை பழுது பார்த்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் மேற்கொள்வதற்கு அரசு நிதி உதவி பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**